செ.வெ.எண்.26 நாள்:16.11.2020

**நீலகிரி மாவட்ட இளைஞர் நீதிக்குழுமத்தில் காலியாக உள்ள உதவியாளர் மற்றும் கணிணி இயக்குபவர் (Assistant cum Data Entry Operator) பணியினை ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப 30.11.2020-க்குள் விண்ணப்பிக்க வேண்டும்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப.. அவர்கள் தகவல்.**

---

நீலகிரி மாவட்ட இளைஞர் நீதிக்குழுமத்தில் காலியாக உள்ள உதவியாளர் மற்றும் கணிணி இயக்குபவர் (Assistant cum Data Entry Operator) பணியினை ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

உதவியாளர் மற்றும் கணிணி இயக்குபவர் (Assistant cum Data Entry Operator) பணிக்கு விண்ணப்பிப்போர், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தட்டச்சில் தமிழ்/ஆங்கிலத்தில் முதுநிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் கணிணி இயக்க தெரிந்தவராக இருத்தல் வேண்டும். 40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது. மாத தொகுப்பூதியம் ரூ.9000/- (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

தகுதியுள்ள நபர்கள் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் வரும் 30.11.2020க்குள் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பங்களை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், க.எண்:19, மாவட்ட ஆட்சியர் கூடுதல் வளாகம், பிங்கர் போஸ்ட், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இது குறித்த மேலும் விவரங்களுக்கு 0423 – 2445529 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.